★ ரைம்ஸ் பத்திரிகை மீது தொடர்ந்த வழக்கின் மேன்முறையீடு

## மானநஷ்டமாகப் பெற்ற 7.5லட்சம் ரூபாவையும் ஸ்ரீமா திருப்பிச் செலுத்த வேண்டும் என தீர்ப்பு

'ரைம்ஸ்' பத்திரிகை நிறுவனம் செய்து கொண்ட மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்க்கட்சித்தலைவியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை, மேற்படி நிறுவனத்துக்கு ஏழரை லட்சம் ரூபா செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

தம்மை ரைம்ஸ் பத்திரிகை நிறுவனம் அவதூறு செய்து செய்தி வெளியிட்டதாக திருமதி பண்டாரநாயக்கா கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

29.10.1979 இல் மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி 'ரைம்ஸ்' பத்திரிகை நிறுவனம் திருமதி பண்டாரநாயக்காவுக்கு மானநஷ்டமாக ஏழரை லட்சம் ரூபா வழங்குமாறு தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து ரைம்ஸ் நிறுவனம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 18.04.1984இல் மனுச் செய்திருந்தது! இதனையடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மனுவை மீள் பரிசீலனை செய்தது.

திருமதி பண்டாரநாயக்கா தாம் மானநஷ்டமாகப் பெற்றுக்கொண்ட ஏழரை லட்சம்ரூபாவையும் ரைம்ஸ் நிறுவனத்துக்கு செலவுடன் திருப்பிச்செலுத்தவேண்டும் என்றுதீர்ப்பளிக்கப்பட்டது.

பக்கங்கள் நான்கு        விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 23 பிரமோதூத மார்கழி 05 (20-12-1990) வியாழன்

## மாணவர்களின் நிவாரண உடைகளை ஆசிரியைகள் பங்கு போட்டனர்!

அல்லைப்பிட்டியில்உள்ள ஒரு பாடசாலையின் மாணவர்களுக்கு நிவாரணமாகக் கிடைத்த உடைகளில் தரமுள்ளவற்றை அங்கு பணிபுரியும் ஆசிரியைகள் தமக்கும், தமது உறவினர்களுக்கும் எடுத்துக் கொண்டனராம். இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட இம் மாணவர்களுக்கு நிவாரண உதவியை வழங்குவதற்கு சேகரிக்கப்பட்ட உடைகளில் இருந்தே இவ்வாறு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் சரியான முறையில் மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை எனவும் சிலருக்கு கூடுதலாகவும், சிலருக்கு குறைவாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டது எனவும் இந்த ஆசிரியைகள் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது.

### உணவுக் கப்பல்கள் வர வசதி செய்யுமுகமாக

# காங்கேசன் துறைமுகப் பகுதி

# பாதுகாப்பு வலயமாகின்றது!

## கூட்டுப்படைத் தலைமையகம் இணக்கம்

வடபகுதிக்கு உணவுப் பொருட்களை ஏற்றிவரும் கப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்தைப் பயன் படுத்துவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது. காங்கேசன்துறைப் பகுதியை கடல் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்துவது பற்றியும், அப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதுபற்றியும் ஆராயப்படுமென கூட்டுப்படைத்தலைமையகம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திற்கு அறிவித்துள்ளதாகவும் தெரிகிறது.

ஆனால், கடல் பாதுகாப்பு வலயத்தைப் பிரகடனப் படுத்தி இராணுவ நடவடிக்கைகளை அப்பகுதியில் நிறுத்தினால் மட்டுமே கப்பல்களிலிருந்து உணவுப் பொருட்களை இயக்கக்கூடியதாக இருக்குமெனச் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ் அரச அதிபர் காங்கேசன்துறைக்கு உணவுக்கப்பல்களைக் கொண்டு வருவது தொடர்பாக,சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து கொழும்புடன் தொடர்பு கொண்டு துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

சிலதினங்களில் இதுபற்றிய தீர்க்கமான முடிவு தெரியவருமெனவும், நத்தார் தினத்திற்கு முன்னர் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு உணவுக்கப்பலை தருவிக்கக்கூடியதாக விருக்குமெனவும் சம்பந்தப்பட்டவட்டாரங்கள் தெரி

—04 ஆம் பக்கம் பார்க்க

### நேற்றுக்காலை இராணுவத்தினர்

## கட்டுவனில் இருந்து வெளியேற முயற்சி புலிகளின் தாக்குதலினால் முறியடிப்பு

நேற்றுக் காலை 6 மணியளவில் கட்டுவனிலிருந்து மல்லாகம் புகையிரத நிலைய வீதியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற உக்கிரச் சமரின் பின் இராணுவம் இழப்புகளுடன் பின்வாங்கியது. இதனைத் தொடர்ந்து ஏழாலை, குப்பிளான் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் இந்த ஷெல் தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்தன. சில கால் நடைகளும் பலியாகின.

நேற்றைய மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் வீரமரணமடைந்த 8 பெண் போராளிகளின் விபரம்:- கப்டன் சுந்தரி (உருத்திராபதி உதயலட்சுமி வல்வெட்டித்துறை), தவஜீவனா (கணபதிப்பிள்ளை சாந்தினி மல்லாகம்), ஆனதி (ஐயாத்துரை கிருஷ்ணலீலா முள்ளியவளை) கேராசா (ஜெகநாதன் ஜெகதீஸ்வரி குச்சவெளி) ஜெலோவா, சுகந்தா, கேத்திகா, நிரஞ்

## மட்டக்களப்பில் 8 பொதுமக்களை இராணுவம் சுட்டுக்கொன்றுள்ளது

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று ...ருந்த 5 பொதுமக்களையும் இராணுவம் சுட்டுக் கொன்

### சேந்தான்குளத்தில் கடற்படை தாக்கு

நேற்றுக் காலை 7 மணியளவில் சேந்தான்குளம் பகுதியை நோக்கி கடற்படைப் படகு பலத்த கடற் பீரங்கித் தாக்குதலைமேற்கொண்டது.

இத் தாக்குதலால் சேந்தான்குளம் பகுதியிலுள்ள பல வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன. (48)

### கூட்டுறவு ஊழியர் அன்பளிப்பு

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் தென்தமிழீழத் தமிழர் துயர் துடைப்பு நிதிக்காக 1 லட்சத்து 125 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளனர். (ப 10)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று ஆலையடி வேம்புப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மூன்று ஆண்களைச் சுட்டுக் கொன்றனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றதாகவும் இதில் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை சாந்தமாலையில் உள்ள அந்தோனியார் குளக்கரையில் கால் நடைகளை மேய்த்துக் கொண்டிருந்த 5 பொதுமக்களையும் இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது.

சுட்டுக் கொலை செய்யப்

— 4ஆம் பக்கம் பார்க்க

குச்சவெளி) ஜெலோவா, சுகந்தா, கேத்திகா, நிரஞ்சனா.

இராணுவத் தரப்பில் 4

— 4ஆம் பக்கம் பார்க்க

# வடக்கே உணவுக் கப்பல்களை அனுப்ப கொழும்பில் ஏற்பாடு

ஐயாயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான உணவுப் பொருட்களுடன் பாரிய கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அடுத்த வாரம் வரவுள்ளதாகக் கொழுப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பருத்தித் துறையில் இருந்து கடற் கொந்தளிப்புக் காரணமாக திருகோணமலைக்குச் சென்ற 'லங்காசிறி' என்ற கப்பல் வடக்கே மீண்டும் திரும்பி வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து 'குமணெ' கப்பல் உணவுப் பொருட்கள், அத்தியாவசிய பொருட்கள், மக்கள் வங்கிக்குரிய பணம் என்பவற்றுடன் நாளை வடக்கு நோக்கிப் புறப்படவுள்ளது என அச் செய்திகள் தெரிவிக்கின்றன

காங்கேசன்துறைக்கு வரும் கப்பல்களிலிருந்து பொருட்

—04ஆம் பக்கம் பார்க்க

# கொடிகாமம் சந்தை மீது ஹெலி தாக்கி; ஒருவர் பலி!

நேற்றுக் காலை 7.30 மணியளவில் கொடிகாமம் மத்திய சந்தையில் ஹெலிகப்டர் ஒன்று தாக்குதல் நடத்தியதில் ஒருவர் பலியானார். நால்வர் காயமடைந்தனர்.

கற்கோவளத்தைச் சேர்ந்த நடராசா(50) என்பவரே பலியானவராவர் இவர் தும்பளையில் பேக்கரியில் கடமை புரிபவர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி, மந்திகை ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்,

சந்தைப் பகுதியில் நேற்று நடந்த தாக்குதலை அடுத்து கொடிகாமத்தில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. (ப-26)

# கிழக்கு மாகாண அகதிகளுக்கு செஞ்சிலுவைச்சங்க நிவாரணம்

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்திற்கு வந்திருக்கும்மக்களுக்கு யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தால் நிவாரணப் பொருட்கள்வழங்கப்பட்டுவருகின்றன.

இன்னமும் இந் நிவாரணப் பொருட்கள் கிடைக்காத கிழக்கு மாகாண மக்கள் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தில் தங்களை உறுதிப் படுத்தி நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (74)

## மினிவான் மீது தாக்குதல்

இயக்கச்சியிலிருந்து யாழ் நகர் நோக்கி வந்து கொண்டிருந்த மினிவான் மீது பளை கச்சார் வெளிச் சந்தியில் ஜீ-பிளேனிலிருந்து நேற்று முன்தினம் மாலை தாக்குதல் நடாத்தப்பட்டது. (ப 3)

# தொண்டர் ஆசிரியருக்கான நேர்முகப்பரீட்சை திடீர் நிறுத்தம்

கொழும்பிலிருந்து கிடைத்த அவசர வானொலிச் செய்தியை அடுத்து யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவிருந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர் முகப் பரீட்சை நேற்று திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களுக்கு போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் நியமனம் வழங்க கொழும்பில் தீர்மானிக்கப்பட்டதை அடுத்தே நேர்முகப் பரீட்சை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களுக்கு போட்டிப் பரீட்சை மூலமே

— 04 ஆம் பக்கம் பார்க்க

# செயலக ஊழியர்கள் செல்ல இராணுவம் அனுமதி மறுப்பு

வவுனியா செயலகத்தைச் சேர்ந்த பல ஊழியர்கள் வேலைக்குச் செல்ல இராணுவத்தால் அனுமதிக்கப்படவில்லை.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வவுனியாவில் இருந்து இடம் பெயர்ந்து யாழ் வந்த அரச ஊழியர் பலர் திரும்பவும் தமது கடமைக்காக வவுனியா சென்றபோதே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (66)

# தொண்டமானாறில் ஷெல் வீச்சு வயாவிளானில் ஹெலி சூடு

நேற்று முன்தினமிரவு பலாலியில் இருந்து வளலாய் நோக்கி பரா வெளிச்சக்குண்டு ஏவப்பட்டதைத் தொடர்ந்துஇரண்டு ஷெல்கள் தொண்டமானாறு நோக்கி ஏவப்பட்டன,

பகல் ஒரு மணியளவில் வயாவிளான் வளலாய்ப்பகுதி

— 4ஆம் பக்கம் பார்க்க

# குவா... குவா,.. குழந்தை குடும்பத்தை ஓட்ட உதவுகிறது

மேற்கு ஜேர்மனியில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் அதிகளவில் குழந்தைகளைப் பெற்றெடுப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனராம்.

அங்கு அகதியாகத் தங்கியுள்ளவர்களுக்கு குழந்தை பிரசவித்தால் மேற்கு ஜேர்மன் அரசு அவர்களுக்கு 600 டி. எம். பணத்தை (இலங்கைப் பெறுமதியில் 15 ஆயிரம் ரூபா) குறிப்பிட்ட காலத்திற்கு மாதாந்தம் விசேட நன்கொடையாக வழங்குகின்றதாம்.

இப்பணத்தைக் கொண்டு தமது குடும்பச் செலவை ஓரளவு சமாளிக்க முடியும் என்பதினாலேயே தமிழ் அகதிகள் அங்கு குழந்தைகளைப் பெற்றெடுப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனராம். (ப-1)

# தமிழ் இளைஞர் கட்டுநாயக்காவில் காரணமின்றி கைது!

## போலி ஆவணங்களுடன் சென்றோர் பாரிஸில் பரிதவிப்பு

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிவலயத்தில் வெளிநாடு செல்லும் தமிழர்கள் மீதும் வெளிநாடுகளில் இருந்து இங்கு வரும் தமிழர்கள் மீதும் பலவித கெடுபிடிகள் நடப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விதம் தமிழ் மக்கள் காரணம் எதுவுமின்றி கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு வரும் சம்வங்களும் பெருமளவில் இடம் பெறுகின்றன.

அண்மையில் வெளிநாட்டிலிருந்து திரும்பிவந்த அனலைதீவைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் இதுவரை விடுவிக்கப்படவில்லையெனவும் அவரது பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்படுபவர்கள் பலமாக தாக்குதலுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்படுபவர்களுக்கு என்ன நடைபெற்றது என்பது பற்றியும் அறியமுடியவில்லை.

இவ்வாறே வெளிநாடுகளிலிருந்து திரும்பும் அல்லது வெளிநாட்டுக்கு செல்லவென செல்லும் தமிழ் இளைஞர்கள் பலர் கட்டுநாயக்காவில் காரணமின்றி கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### தமிழ் இளைஞர்கள் பாரிஸில் தடுத்து வைப்பு

இதேவேளை வெளிநாடுகளுக்கு செல்ல முயலும் தமிழ் மக்களை போலி பிரயாண ஏஜன்சிகள் மீண்டும் ஏமாற்றத் தொடங்கும் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. வெளிநாடுகள் செல்லவுள்ளவர்களிடம் பல லட்சம் ரூபாய்களை இவர்கள் பெற்றுக்கொண்டு பாங்கொங், மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் இவர்களை விட்டுவிட்டு இப்போலி பிரயாண முகவர்கள் தலைமறைவாகி விடுகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் வடபகுதியைச் சேர்ந்த இளம் பெண்மணி ஒருவர் இப்படியானவர்களினால் ஏமாற்றப்பட்டுள்ளார். இவரை ஜேர்மனிக்கு அழைத்துச்செல்வதாகக் கூறிய முகவர் ஒருவர் மாஸ்கோ விமான நிலையத்தில் அனாதரவாக விட்டுவிட்டு தலைமறைவாகியுள்ளார். இப் பெண்மணி தனது இரு குழந்தைகளுடன் மாஸ்கோவில் மிகுந்த கஸ்டம் அனுபவித்தபின் மீண்டும் மாஸ்கோவிலிருந்து கட்டுநாயக்காவிற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இது இவ்விதமிருக்க பிரான்சுக்கு அழைத்துச்செல்லப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த ஐம்பதிற்கு மேற்பட்ட இளைஞர்கள் பாரிஸ் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் பிரயாணம் செய்வதற்கான ஆதாரங்கள் எதுவும் கைவசம் வைத்திருக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களும் இப்படியான போலி முகவர்களினால் ஏமாற்றப்பட்டிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. (24)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### வெளிநாட்டுக் காசோலைகள்

ஆசிரியர்,
முரசொலி.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும் தொகையான குடும்பங்கள் தமது வாழ்க்கைச் செலவிற்கு பெரிதும் வெளிநாட்டில் உள்ள அவர்கள் உறவினர்கள் அனுப்பும் பணத்திலேயே தங்கியுள்ளனர். இந்நிலையில் கடந்த ஆறுமாத காலமாக வெளிநாட்டுக் காசோலைகளை உடன் பணமாகவோ, அன்றி வங்கிக் கட்டளையாகவோ யாழ்ப்பாணத்தில் உள்ள எந்தவொரு வங்கியும் மாற்றிக் கொடுப்பதில்லை.

இதற்கு வங்கிகள் கூறும் முக்கிய காரணம், நாளாந்த நாணய மாற்று விகிதம் கொழும்பில் இருந்து பெற்றுக் கொள்ள இயலாது இருக்கிறது என்பதே.

1987 ஆம் ஆண்டு இதேபோன்ற சூழ்நிலை நிலவிய பொழுது யாழ் கச்சேரியில் மாத்திரம் தொலைபேசித் தொடர்பு இருந்தது. அதன்மூலம் கொழும்புடன் தொடர்பு கொண்டு நாணய மாற்று விகிதத்தை வங்கியாளர்கள் அறிந்து மக்களுக்கு உதவினார்கள். ஆனால் இன்றோ யாழ்ப்பாணத்தில் மூன்று பொது ஸ்தாபனங்களில் தொலைத் தொடர்பு வசதிகள் இருந்தும், அவற்றை வங்கியாளர்கள் பயன்படுத்துகிறார்களில்லை என்று வாடிக்கையாளர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள்.

— ஜி. பிறாங் ரைஸன்

ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

# இராணுவ மிதி வெடி சிறுமி காலிழப்பு

மூதூரில் உள்ள தெகிவத்தை பகுதியில் சாமான் வாங்கச் சென்ற செல்லையா மாலினி (11) எனும் சிறுமி இராணுவத்தினர் வைத்த மிதிவெடியில் சிக்கியதில் தனது காலை இழந்துள்ளார்.

# திருமலை பஸ் நிலையப் பகுதியில் தமிழர்கள் நடமாட முடியா நிலை

திருகோணமலை பஸ் நிலையத்திலுள்ள 'சிங்கள மாக்கெட்' மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது என்றும், இங்கே சிங்களவர்கள் மட்டுமே நடமாட முடியும் என்றும், தமிழர்கள் அவ்விடத்திற்குச் செல்ல அனுமதிக்கப் படுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்தை இந்திய இராணுவ வருகையின் பின் இயங்காது இருந்தமை குறிப்பிடத்தக்கது அப்போது தமிழ் மக்களின் பாவனைக்கெனப் புறம்பான சந்தையொன்று ஆரம்பிக்கப்பட்டதாகவும் அதுவும் தற்போது இயங்குவதில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப. 2)

# மது அருந்திய மூவர் மரணம்

தென்பகுதியில் மதுஅருந்திய மூவர் மரணமாயினர், ஐவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரகம அட்டுலுகம என்ற இடத்திலுள்ள சட்ட விரோத மது விற்பனைச் சாலையில் மது அருந்திய மூவரே மரணமடைந்தவர்களாவர்.

இறந்தவர்களில் ஒருவர் அப்பகுதியைச் சேர்ந்த எம். கே. சறாக் என்ற முஸ்லிம் இளைஞராவார். (38)

# கரன்சி கடத்தல் முயற்சி முக்கிய பிரமுகரின் மகள் கைது

முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் முன்னாள் காரியதரிசியான திரு. டபிள்யு எம் பி பி மனிக்தீவலையின் மகள் அந்நியக் கரன்சிகள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருமதி மகாதேவி பிரசங்க மனிக்தீவல அந்நியக் கரன்சிகளைக் கடத்திச் செல்ல முயன்றார் என்ற குற்றச்சாட்டின்பேரில் அண்மையில் கட்டுநாயக்க சர்வதேச விமான

கப்பகுதிக்கு வந்து சேர்ந்த இப்பெண்மணி சுங்கப்பகுதியினரின் பிரகடனப் பத்திரத்தில் 700 அமெரிக்க டாலர்கள் பெறுமதியான பயணக் காசோலைகளை மட்டுமே கொண்டு செல்வதாகப் பிரகடனப் படுத்தியிருந்தார். ஆனால் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர் ஒருவர் மூலம் 700 அமெரிக்க டாலர்களுக்கான பயணக் காசோலை திருமதி மெனிக்தீவலவுக்கு வழங்கப்பட்டதற்கான எந்தச்

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தனபாலசிங்கம் மகேந்திரகுமார்
(வீரவேங்கை விக்னா)

ஜனனம்: 8 - 7 - 1971

வீரமரணம் 20 - 11 - 1990

விக்னா! உன் சமாதி மீது தொட்டு
சபதம் எடுத்து விட்டோம்
உன் கனவுகள் நினைவாகும் வரை
எமது பயணம் தொடரும்.

அல்லாரை வாழ் மக்கள்.

தந்தை செல்வா
தொடக்க நிலைப் பள்ளி
தெல்லிப்பழை
ஆண்டு 1 அனுமதி — 1991

## தந்தை செல்வா
## தொடக்க நிலைப் பள்ளி
### தெல்லிப்பழை

**ஆண்டு 1 அனுமதி – 1991**

ஆண்டு ஒன்றில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கு விண்ணப்பங்களை அனுப்பியோர் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய முன்றலில் நாளை தொடக்கம் 25-12-1990 வரை தினமும் காலை 10 மணிக்கு முன் நேர்முகச் சந்திப்புக்குரிய கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ꞉பர்.

12122

## தொழில்நுட்பக் கல்லூரி
### யாழ்ப்பாணம்

**1991ஆம் கல்வி ஆண்டுக்கான மாணவர்களை அனுமதித்தல்.**

1990.09 28ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்ட இக்கல்லூரியின் சகல பயிறசி நெறிகளுக்கும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 1990.12.28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியும் 1990.12.28 ஆகும்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1990.12.18.

சி. இராஜேந்திரா
அதிபர்.

12123

மனிக்தீவல அந்நியக் கரன்சிகளைக் கடத்திச் செல்ல முயன்றார் என்ற குற்றச்சாட்டின்பேரில் அண்மையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சிங்கப்பூர் செல்லும் விமானத்தில் ஏறுவதற்கென சுங் ...

... விநியோகஸ்தர் ஒருவர் மூலம் 700 அமெரிக்க டாலர்களுக்கான பயணக் காசோலை திருமதி மெனிக்தீவலவுக்கு வழங்கப்பட்டதற்கான எந்தச் சான்றும் அவரது கடவுச்சீட்டில் பதியப்பட்டிருக்கவில்லை என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. (38)

# பணம் எடுத்துவருவதில் தடங்கல்
## வங்கி அலுவல் பாதிப்புறும் அபாயம்

யாழ் மாவட்ட வங்கிகளுக்கு கொழும்பிலிருந்து பணம் எடுத்து வரும் நடவடிக்கை பாதிக்கப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் பருத்தித்துறை துறைமுகம் வரும் உணவுக்கப்பலிலேயே வங்கிகளுக்கு பணம் எடுத்து வரப்பட்டது.

ஆனால் தற்போதைய சீரற்ற காலநிலையால் கப்பல் சேவை நிறுத்த முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது.

இதனையடுத்துதரைமார்க்கமாக உணவுப் பொருட்களை இங்கு கொண்டுவர முயற்சி எடுக்கப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

ஆனால் பணத்தை தரைமார்க்மாகக் கொண்டுவர கொழும்பில் அனுமதிவழங்கப்படமாட்டாது எனவும் இதனால் யாழ் மாவட்ட வங்கிகளுக்கு பணம் எடுத்து வருவதிழ் தடங்கல்கள் ஏற்படலாமெனவும் அறியப்படுகின்றது. (74)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு


நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12121

விக்னா! உன் சமாதி மீது தொட்டு
சபதம் எடுத்து விட்டோம்
உன் கனவுகள் நினைவாகும் வரை
எமது பயணம் தொடரும்.

அல்லாரை வாழ் மக்கள்.

12125

## 45-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
29 - 12 -1973

●

வீரமரணம்
07- 11 - 1990

### வ. ஆனந்தசிவம்
### (வீரவேங்கை மது)

எமது பயணம் தொடரும் உன் இலட்சியம் ஈடேற எமது வீர அஞ்சலிகள் உரித்தாகட்டும்.

மீசாலை,

மீசாலை வடக்கு பொதுமக்கள்.

12124

## சென்னையில் வெற்றிகரமாக பரீட்சிப்பு!

# 300 ரூபா மட்டும் போதுமானது

## சோதனைக்குழாய் மூலம் மலிவு விலையில் குழந்தை

மிகக்குறைந்த செலவில் சோதனைக்குழாய் குழந்தையை உருவாக்கும் முறையொன்றை சென்னையிலுள்ள மருத்துவநிலையமொன்று பரீட்சித்துப் பார்த்து வெற்றிபெற்றுள்ளது.

இப்புதிய முறையின் மூலம் கர்ப்பப்பை உள்ள எல்லாப் பெண்களும் மிகக்குறைந்த செலவில் இலகுவாக குழந்தையொன்றுக்கு தயாக முடியும்.

சென்னையில் உள்ள ஜீ. ஜீ. மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் செல்வராஜ் அவரது மனைவியாருமநடிகர்ஜெமினி கணேசனின் மகளுமான கமலா செல்வராஜ் ஆகியோர் இம்முறையை அறிமுகப் படுத்தியுள்ளனர்.

முன்னர் சோதனைக்குழாய் குழந்தையொன்றை உருவாக்க 30 ஆயிரம் ரூபா செலவு ஏற்பட்டது ஆனால் இப் புதிய முறையின் மூலம் குழந்தையொன்றை உருவாக்க 300 ரூபா மட்டும் போதுமானது.

இந்த நவீன மருத்துவ முறைக்கு 'கர்ப்பப்பையில் விந்திட்டு கருத்தரிக்கச் செய்யும் முறை' எனப் பெயரிட்டுள்ளது.

'கர்ப்பப்பையில் விந்திட்டு கருத்தரிக்கச் செய்யும் முறை' என்பது ஆணின் உயிரணுவை எடுத்து அப்படியே பெண்ணின் கர்ப்பப்பையில் சேர்த்து விடுவது ஆகும்.

சில வாரங்களுக்கு முன்னர் இந்த முறையிலேயே தென்னிந்தியாவின் முதல் சோதனைக் குழாய் வெற்றிகரமாக பிறக்கவைக்கப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## செயற்கை இரத்தம்
### விரைவில் பாவனைக்கு வருகிறது

செயற்கை இரத்தத்தை உற்பத்தி செய்வதில் பிரெஞ்சு விஞ்ஞானிகள் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்.

வடக்குப் பிரான்ஸிலுள்ள தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகளே இதில் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

இவர்கள் இதுவரை மிருகங்களை வைத்துப் பரிசோதனைகளை நடாத்தினார்கள். இந்தப் பரிசோதனைகள் வெற்றி அளித்திருக்கின்றன.

அடுத்த வருடம் இவர்கள் மனிதர்களில் இந்தப் பரிசோதனைகளை ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

## தொடக்கநிலை பள்ளி நடைபெறுகிறது

தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி தற்போது தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலையில் வழமையான நேரத்துக்கு நடைபெறுவதாக அதிபர் அறிவித்துள்ளார்.

## தொலைக்கல்விப் பயிற்சிநெறி
## தெரிவான ஆசிரியர் விபரம

(நேற்றைய தொடர்ச்சி)

**கணிதநெறி**

செல்வி டி பி பத்மாவதி சரசாலை அ. த. க. பா, திரு எஸ். இளங்குமரன் புங்குடுதீவு சரஸ்வதி வித்தி. செல்வி ஏ. பரமலட்சுமி பாலாவோடை த. க. பா, செல்வி ரி. சர்வோதயபரி தியாகராஜா ம. ம. வி, திரு பி. கிருபாகரன் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி, செல்வி ரி தனபாக்கியம் நெடுந்தீவு மத்திய றோ. ம. வித்தி.

**விஞ்ஞான நெறி**

செல்வி ஆர். ஜெஜமதி சோதிவேம்படி வித்தி. செல்வி எம் மதிவதனி சரசாலை வடக்கு கணேசவித்தி. செல்வி எம். சுதமதி சரசாலை சரஸ்வதி வித்தி, செல்வி மேரிஸ்ரெலா பரி அந்தோனியார் கல்லூரி, செல்வி டி. அருந்ததி சரசாலை வித்தி, திருமதி என். நாகேஸ்வரன் சண்டிலிப்பாய் இந்து வித்தி.

(தொடரும்)

## எம். ஜி. ஆர். நினைவு தினம்

புரட்சித்தலைவர் எம் ஜி ஆரின் 3-வது நினைவு தின ஒழுங்குகள் சம்பந்தமாகவும், குருநகர், பாஷையூர் பகுதிகளில் உள்ள அன்னாரின் சிலைகளுக்கு அருகில் விசேட வைபவங்கள் நடாத்துவது தொடர்பாகவும் எம் ஜி ஆர் மன்ற பிரதிநிதிகள் தம்மை தாவடியிலுள்ள இல்லத்தில் சந்திக்குமாறு பொன். மதிமுகராஜா கேட்டுள்ளார்.

## சாவகச்சேரியில் மாங்குளம் வெற்றி விழா

இம்மாதம் 22ந் திகதி மாங்குளம் இராணுவ முகாமின் வெற்றி நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அன்றைய தினம் கரும்புலி லெப்-கேணல் போர்க்குக்கும், வீரமரணமடைந்த ஏனைய புலிகளுக்கும் அவர்களின் படங்களுக்குக் குத்துவிளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்படும்.

பிற்பகல் 6 00 மணிக்குச்

## 14 கொலைகளைச் செய்தவர் காவலிலிருந்து கடத்தப்பட்டார்

வன்செயல் காலங்களில் 14 கொலைகளை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுதிஸ்ஸமகாரமை நீதிமன்றத்திலிருந்து அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு காரில் கூட்டிச்செல்லப்பட்ட சந்தேக நபரான ரத்நாயக்க முகமூடியணிந்த கோஷ்டியால் விரவிலையில் வைத்து கடத்திச் செல்லப்பட்

விட வேண்டாம் என்றும் பிணையில் விடப்பட்டால் தனது உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என்றும் இவர் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தாராம்.

இதனால் பொலிஸ் மற்றும் சிறைக்காவலர்களுடன் அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு காரில் கொண்டு

---

ஸ்பெஷல் ரிப்போர்ட்

## வளைகுடா பிரச்சினை

# பாலைவனத்தில் ஒரு புயல்

ஈராக்கின் பலவான் சதாம் ஹுசைனின் டாங்கிகள் குவெய்த்திற்குள் நுழைந்தபோது, விக்கித்து செயலிழந்து நின்ற உலகம் சதாமை பாக்தாத் திருடன் என்றது. துருப்புகள் திரும்பிவிடும், கவலை வேண்டாம் என்று சதாம் வாக்களித்தார். ஆனால், ஒரு பயங்கர காரியத்தையும் செய்தார். அந்தச் சிறிய ஆனால், எண்ணெய் செல்வம் கொழிக்கும் ராஜ்யத்தைக் கைப்பற்றினார். மிகச் சுலபமாக, பொருளாதார ரீதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த மத்திய கிழக்குப் பிரதேசத்தின் வரைபடத்தை கிட்டத்தட்ட எதிர்ப்பே இல்லாமல் மாற்றி விட்டார். இந்தப் 'பாலைவன சர்வாதிகாரி' ஹிட்லருக்குப் பிறகு இப்படிப்பட்ட ஒரு திணைக்களம் யாரும் காட்டியதில்லை. சர்வதேச சக்திகளின் சமநிலையைக் குலைக்கும் அளவுக்குப் பயமுறுத்தியதில்லை. அந்த வட்டாரத்திலேயே அவருக்கு இருக்கும் படைபலம் மிக சக்தி வாய்ந்தது. திடுக்கிட வைக்கும் இந்த ஆக்கிரமிப்பு, வல்லரசுகளைத் தடுமாற வைத்திருக்கிறது. குவெய்த்தில் இருக்கும் 1, 70, 000 இந்தியர்களுக்கும், மத்திய கிழக்கு மொத்தத்திற்குமே அமைதியான, வசதி மிகுந்த வாழ்க்கை என்பது யாரும் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு ஆட்டம் கண்டிருக்கிறது.

சதாமின் அடுத்த இலக்கு, சவுதி அரேபியாவாக இருக்கலாம் என்பது தான் அதிக கவலை தரும் விஷயம் அப்படி நடந்தால் அமெரிக்காவுடன் நேரடி மோதல் ஏற்படும் இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், அரபு நாடுகளில் சர்வாதிகாரியாக யுத்தம் உருவாவதைத் தடுக்கக் கூடிய ஒரே நாடு இஸ்ரேல்- அரபு நாடுகளின் பொதுவான எதிரி.

வளைகுடா நாடுகள் எத்தனை பலவீனமானவை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, குவெய்த் கைப்பற்றப் பட்டபோது 36 மணி நேரம் வளைகுடா நாடுகளின் அதிகாரபூர்வ செய்தித் துறை அந்தச் செய்தியை வெளியிடவில்லை. ஒரு பயங்கர கையாலாகாத்தன சோர்வு எங்கும் வியாபித்திருக்கிறது.

''இன்று குவெய்த் என்றால், நாளை எதுவாக இருக்கும்? பாஹ்ரீன் அல்லது ஐக்கிய அரபு நாடுகளா?'' என்கிறார் டுபாயைச் சேர்ந்த அப்துல் ஹமீத் அலி இந்த பயம் சத்தியமானது என்கிறார் ஒரு மூது நிலை பாதுகாவல் அதிகாரி, 'சதாம் ஹுசைன் எங்கள் மேல் பழி தீர்க்காமல் விடமாட்டார்.' ஐக்கிய அரபு நாடுகளும் குவெய்த்தும்தான் தன்னுடைய எண்ணெய் வருமானத்தைக் குலைத்தன என்று சதாம் குற்றம்சாட்டியிருந்ததைத்தான் அவர் குறிப்பிட்டார்.

அண்டை நாடுகளைக் கலவரப்படுத்துவது மட்டும் சதாமின் நோக்கமில்லை, அவருக்கு இது ஒரு வேள்வியைப் போல - சரித்திரக் காரணங்களும், ராணுவ வியூகமும் கொண்ட தொலை நோக்குத் திட்டம் முக்கியமாக, யுத்தத்தால் நிலைகுலைந்து

எமிருடைய அரண்மனை கூட இரண்டாவதாகப் போயிற்று.

ஒரே வீச்சில் வளைகுடா நாடுகளின் பொருளாதார எழுச்சி என்று கருதப்பட்ட ஒன்றை, சதாம் குலைத்தது ஒரு விசித்திரம். நிலைமை அவ்வளவு மோசமில்லை என்று டுபாயில் அதிகாரிகள் சொன்னாலும் மற்றவர்கள் அத்தனை நம்பிக்கையுடன் இல்லை

முற்றுகையான சில மணி நேரத்துக்குள்ளேயே மிகுந்த மதிப்புள்ள குவெய்த்திய டினார் சரிந்து விட்டது.

கல்ஃப் மாநிலங்களிலிருந்து முதலீடுகள் எல்லாம் வேகமாக வெளியேறுகின்றன என்று பரவலான ஒரு பயம் இப்போது நிலவுகின்றது. ''சாதாரண நிலை வருவதற்குள் இன்னும் பல விஷயங்கள் நடக்கப் போகின்றன'' என்கிறார் எம். வி பிரசாத். இவர் ஒரு கப்பல் துறை நிர்வாகி.

குவெய்த்தில் இருக்கும் 1,70,000 இந்தியர்களுக்கு எதிர்காலம் ஒரு கேள்விக்குறியாக இருப்பதில் சந்தேகமில்லை. குவெய்த்தின் டினாருக்கும் ஈராக்கின் டினாருக்கும் சம மதிப்பு ஏற்படுத்தும் அரசின் முயற்சியினால் அவர்களுடைய ஊதியம் வெகுவாகக் குறைந்துவிட்டது ஈராக்கில் இருக்கும் வேலையில்லாதிண்டாட்டத்தினால் நிறையப் பேர் (NRI) வேலையை இழக்க வேண்டிய ஆபத்தும் இருக்கிறது.

கட்டிட வேலைதான் அதிகமாகப் பாதிக்கப்படும் முக்கியமாக, டுபாயில் பாதிப்பு அதிகம் ஹாங்காங்கிலிருந்து வெளியேற முயலும் சிந்தி பிசினஸ்காரர்கள் இங்கு நிறைய முதலீடு செய்திருக்கிறார்கள். இங்கு 15 வருஷங்களாக வசிக்கும் அஹமத் ஹுசைன் சொல்கிறார்: ''உங்கள் பணத்தைப் போட வேண்டிய இடம் வரிச்சுமை இல்லாமலிருந்தால் மட்டும் போதாது பத்திரமாகவும் இருக்கவேண்டும். இந்த இடத்தில் இனி பத்திரம் இல்லை''

இப்போது முக்கியமான கேள்வி இது தான். சதாமை நிறுத்துவது சாத்தியமா? பதில்—சாத்தியம் என்று தோன்றவில்லை. படையெடுப்பைப் பற்றிய வாக்கெடுப்பு எடுக்கப்பட்டபோது—ஈராக்கின் டாங்கிகள் குவெய்த்துக்குள் நுழைந்து 40 மணி நேரத்துக்குப் பிறகு—ஆச்சரியகரமாக அரபு லீக்கின் நிறைய உறுப்பினர்கள் ஈராக்கைக் கண்டிக்க மறுத்தார்கள் முக்கியமாக ஜோர்டான், ஏமன், பாலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO) மறுத்தன குவெய்த்தின் சகோதர நாடுகளான சவுதி அரேபியா, பாஹ்ரீன், கத்தார், ஓமான் மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் கண்டனத்தைத் தெரிவிக்குமுன், கிட்டத்தட்ட செயலிழந்து போன சங்கடத்தை வெளிப்படுத்தின.

சதாமின் கையில் இருக்கும் துருப்புச் சீட்டு—அரபு நாடுகளின் ஒற்றுமையின்மை

கோஷ்டியால் விரவிலையில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுளளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிவான் இவரை பிணையில் செல்ல அனுமதிக்க முன்வந்தபோது தன்னை பிணையில் பாந்தோட்டை சிறைச்சாலைக்கு காரில் கொண்டு செல்லப்பட்டபோது வீரவிலையில் வைத்து முகமூடி அணிந்த ஆயுத கோஷ்டிஒன்று காரை வழிமறித்து இவரைக் கடத்திச் சென்றுவிட்டதாம். (11)

# குண்டுவீச்சால்தியேட்டர்கள் சேதம் களியாட்டவரியில் பெரும் பாதிப்பு

யாழ் மாநகரசபைக்கு, யாழ்ப்பாணத்தியேட்டர்களினால் கிடைக்கும் களியாட்டவரி 1990-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1991ம் ஆண்டு 11 இலட்சத்தினால் குறைவடைந்துளளது.

இவ் ஆண்டு யாழ்நகரில் இடம்பெறற கடுமையான விமானத் தாக்குதல்களினால் அனைத்துத் தியேட்டர்களும் சேதமடைந்து விட்டதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ் மாநகர சபையால் தயாரிக்கப்பட்ட 1991-ம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில் மேற்படி தகவல் பெறபபட்டது.

இவ்வாறு சோலைவரியில் 50 லட்சமும் வியாபார வரியில் 10 லட்சமும், வாடகை வரியில் 140 லட்சமும், மின்சாரக் கட்டணத்தில் 620 லட்சமும், நீர் வரியில் 2 லட்சத்து 50 ஆயிரமும் குறைவு ஏற்பட்டுள்ளது. (70)

---

## வீதித்தடை நீக்கம்

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசாங்க வைத்தியசாலைக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்டிருந்த பொதுப் போக்குவரத்துத் தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

சகல வாகனங்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் பிரதானவீதி திறந்து விடப்பட்டுள்ளது. (30)

படும்.

பிற்பகல் 6 00 மணிக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் மிகப் பிரமாண்டமான முறையில் மாபெரும் அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுளளது. அன்றைய தினம் அனைத்து தமிழீழ மக்களையும் கலந்து தமிழீழ தாயக மீட்பில் எமது எழுச்சியைக் காட்டுமாறும், வீதிகள் சந்திகள் தோறும் அலங்கரித்து இந்த நாளைச் சிறப்பாக்க வேண்டும் என தென்மராட்சி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது. (ப-5)

## பெற்றோர்கள் கௌரவிப்பு

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் கல்வி பயின்ற மாவீரர்களின் பெற்றோர்களுக்கு இக்கல்லூரியினால் விருந்துபசாரமளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டது

கல்லூரி அதிபர் திரு இராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விருந்துபசார கௌரவிப்பு வைபவத்தின் முடிவில் மாவீரர்களின் பெற்றோரின் சார்பில் திருமதி மரியாம்பிள்ளை உரையாற்றினார். (50)

கொண்ட தொலை நோக்குத் திட்டம் முக்கியமாக, யுத்தத்தால் நிலைகுலைந்து போயிருக்கும் அவரது பொருளாதாரத்தைச் சீர் செய்ய சதாமுக்குப் பணம் வேண்டும்.

ஒபெக்கின் (OPEC) இரண்டாவது மிகப் பெரிய தயாரிப்பாளராக ஈராக் இருந்தாலும் தனது 140 லட்சம் மக்களைப் பராமரிக்க சிரமப்பட்டு வருகிறது. ஈரானுடன் நடந்த போர் கஜானாவைக் காலியாக்கி கடனாளியாக்கி விட்டது 6.000 கோடி டாலர் அந்நியக் கடனில் 4.000 கோடி டாலர் கடன் சவுதி அரேபியாவும், குவெய்த்தும் கொடுத்திருக்கின்றன சதாம் சாமர்த்தியமாக குவெய்த் கொடுத்திருந்த 1,000 கோடி டாலர் கடனை ரத்து செய்ய முயன்றார். ஈராக்கைச் சேர்ந்த எல்லைப்புறத்து எண்ணெய் நிலத்திலிருந்து குவெய்த் சட்ட விரோதமாக எண்ணெய் எடுத்ததாகக் குற்றம்சாட்டி அதற்கு தண்டனையாகத் தான் கடனைத் திருப்பித் தரப் போவதில்லை என்றார். ஈராக்கியர்களுக்கு இன்னொரு கோபம் கூட ஈரானுடன் போர் நின்று போன பிறகும் வெளிநாட்டு வங்கிகள் அவர்களது நலிந்து போன பொருளாதாரத்தைக் கைதூக்கிவிட முன்வரவில்லை.

ஈராக்கின் துருப்புக்கள் குவெய்த்தில் நுழைந்ததும் அவர்கள் ஆக்கிரமித்த முதல் கட்டிடம் குவெய்த்தின் மத்திய வங்கி என்ற விஷயம் யாருக்கும் வியப்பளிக்கவில்லை.

சதாமின் கையில் இருக்கும் துருப்புச் சீட்டு—அரபு நாடுகளின் ஒற்றுமையின்மை. குவெய்த்திலிருந்து துருப்புக்களை மூன்று நாட்களில் மீண்டும் திருப்பி அழைத்து விடுவதாகச் சொன்ன வாக்கை சதாம் காப்பாற்றவில்லை என்று எகிப்திய ஜனாதிபதி ஹோஸ்னிமுபாரக் ரொம்பவும் கோபமாக இருக்கிறார் ஆனால், வேறு சிலருக்கு குவெய்த்தை ஆண்ட அல்சபா குடும்பம் வெளியேற்றப்பட்டதைப் பற்றி ஏதும் வருத்தமில்லை. இஸ்ரேல் தாக்கினால் ஈராக்கின் உதவி கிடைக்கும் என்று ஜோர்டான் நம்புகிறது. PLO வின் தலைமைப் பீடம் அமைந்திருப்பது பாக்தாத்திலேயேதான். அராஃபத் சுற்றிக் கொண்டிருப்பது ஈராக் அளித்திருக்கும் ஜெட் விமானத்தில் ஏமனைப் பொறுத்தவரை ஈராக்கைப் போன்ற ஒரு சக்தி சவுதிகளை அடக்கத் தேவை.

சவுதி அரேபியா மட்டுமே இப்போது மிச்சம். சதாமின் 10 லட்சம் வீரர்கள் கொண்ட சக்தி வாய்ந்த ராணுவத்தைச் சந்திக்க சவுதிகளுக்குத் தெரியும், அவர்களது 66.000 வீரர் படை அதற்கு எதிரில் தூசு என்று. அமெரிக்கப் படை ஏற்கனவே ரியாத்தில் வந்து காத்திருக்கிறது. ஆனால், அமெரிக்க ராணுவ உதவி கோரினால் அவர்கள் அரபு சகோதரர்களின் கண்டனத்துக்கு ஆளாவார்கள்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

ECRASOLIE REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA 20 - 12 - 1990 வியாழக்கிழமை

# கஷ்டங்களின் மத்தியிலும் கடமைபுரியும் யாழ் பிரதம தபாற்கந்தோர் ஊழியர்கள்

யாழ் பிரதம தபாலக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் இருட்டறைகளிலே தமது அன்றாட வேலைகளைச் செய்யவேண்டியுள்ளது. உரம், கிருமிநாசினி, மிளகாய் முதலிய பொருள்களைச் சேமிப்பதற்கெனக் கட்டப்பட்ட 'மாக்பெட்' நிறுவனக்கட்டிடத்திலேயே இவர்கள் கடமையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்குடா நாட்டுத் தபால்களை சேகரித்து அனுப்புவதும், கொழும்பில் பல மாதங்களாகத் தேங்கிக்கிடந்து கப்பலில் வரும் தபால்களைத் தரம்பிரிப்பதும், குடாநாட்டுத் தபாலகங்களுக்குத் தபால் பொதிகளை அனுப்பி வைப்பதும் போன்றவை நடைபெறும் வடகுடாநாட்டின் மிகப் பெரிய தபாலகம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தத் தபாலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் மேற்கூறிய கஷ்டத்தின் மத்தியிலும். ஊரடங்கு வேளைகளிலும் தமது உயிர்களைப் பொருட்படுத்தாது, வெளிச்சமோ, காற்றோட்டமோ இல்லாத சூழ்நிலையில் தமது வேலைகளைத் துரிதமாகச் செய்து வருகின்றனர்.

இதே வேளை சில திணைக்களங்கள் ஜெனெரேட்டர்மூலம் மின்சாரம் பெற்று தமது வேலைகளைச் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வார முற் குதியில் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் தபாலகத்தைப் பார்வையிட்டுச்சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே யாழ் பிரதம தபாலகத்துக்கும் ஒரு ஜெனெரேட்டர் வழங்க யாழ் செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுக்குமாஎனப்பொது மக்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர். (33)

## தேசிய அடையாள அட்டைகள் தபாலில் அனுப்பப்படுகின்றன

யாழ் செயலகத்திற்கு சுமார் 2000 தேசிய அடையாள அட்டைகள் கிடைக்கப் பெற்று பதிவுத் தபால் மூலமாக உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

புதிதாக விண்ணப்பித்தவர்களின் அடையாளஅட்டைகள் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு அவை கிராமசேவகர்கள் மூலமாக அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் என யாழ் மாவட்ட ஆட்பதிவு ஆணையாளர்) திரு சி. கார்த்திகேசு தெரிவித்தார். (66)

## சுகாதாரச் சீர்கேட்டினால் நகரில் நுளம்புத் தொல்லை

இப்பொழுது நகர்ப்பகுதிகளில், என்றும் இல்லாதவிதமாக நுளம்புகளின் தொல்லை இரவில் மாத்திரமன்றிப் பகலிலும் அதிகரித்துள்ளது.

இதற்கு முக்கிய காரணம், நீர் ஓடைகள், வடிகால்கள் பல மாதகாலமாகத் துப்புரவு செய்யப்படாமல் அவற்றுள் குப்பை கூழங்கள் தேங்கிக் கிடப்பதே எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் முன்பு கிரமமாக 'டீ. டீ. ரி.' வீடுகளுக்கும் சுற்றாடல்களுக்கும் தெளித்து நுளம்புகள் ஓரளவு ஒழிக்கப்பட்டன.

ஆனால் மலேரியா தடுப்புப் பிரிவு ஒன்று இருந்தும் இதனைச்செயற்படுத்த முடியாது இருப்பது குறிப்பிடத்தக்கது. (16, 33)

### சுயவிருப்பத்தால் ஓய்வுபெறுவதால்

## பல கிராமசேவகர்களுக்கு வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன

யாழ் மாவட்டத்தில் இருபத்தைந்துக்கும் அதிகமான கிராமசேவையாளர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறுவதற்கு 20 கிராமசேவையாளர் வரை தற்போது விண்ணப்பித்திருப்பது இதற்குக் காரணமாகும்.

ஆனால் புதிய சுற்று நிருபம் ஒன்றின்படி இவ் வெற்றிடங்களுக்கு புதியவர்கள் தற்போதைக்கு நியமனம் செய்யப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பல கிராமசேவகர் பிரிவுகளை ஒருவரே கவனிக்க வேண்டிய கஷ்டமான நிலைமை ஏற்படலாம் எனத்தெரியவருகிறது.

## அரசாங்க ஊழியர்களுக்கு வைத்தியக் காப்புறுதி அடுத்த வருடம் முதல் வழங்கப்படவுள்ளது

அரசாங்க ஊழியர்களுக்கான வைத்திய காப்புறுதித் திட்டம் 1991ம் ஆண்டு ஜனவரி முதல் செயற்படுத்தப்படவிருக்கின்றது.

அரசாங்க உத்தியோகஸ்தர்கள், இளைப்பாறிய அரச உத்தியோகஸ்தர்கள் நோய் வாய்ப்படும் போது அதன் பொருட்டு பெற்றுக் கொள்ளும் சிகிச்சைக்காக அவர்களால் மேற்கொள்ளப்படும் செலவினங்களை ஏற்க இக் காப்புறுதித் திட்டம் வழி செய்கின்றது

அறுபது வயதுக்குட்பட்ட அரச ஊழியர்களும், எழுபது வயதைத்தாண்டாத இளைப்பாற்றுச் சம்பளம் பெறுபவர்களும் மாதாந்தம் இருபது ரூபா வீதம் செலுத்துவதன் மூலம் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

இருதய நோய், சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டிய நோய்கள், விழியில் வில்லை பொருத்துதல் போன்ற கடும் நோயாளிகளின் உயிரைக்காக்க ஏற்படும் மருந்துச் செலவுகளுக்கும் இத்திட்டம் உதவுமாம் நாளொன்றுக்கு நூறு ரூபா முதல் ஐயாயிரம் வரை வைத்தியச் செலவாக வழங்கப்படுவதுடன் பிரயாணச் செலவாக 750 ரூபாவும் வழங்கப்படும். (66)

## பிரிகேடியர் லக்ஷ்மன் கொலையால் திருமலையில் சிங்களவர் கிலி!

நேற்று முன்தினம் திருகோணமலை பன்மதவாச்சியில் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடித்தாக்குதலில் கொல்லப்பட்ட திருமலை மாவட்ட இராணுவத் தளபதி லக்ஸ்மன் விஜேரட்ன, திருகோணமலையில் சிங்களக் குடியேற்றத்திற்கு முன்னின்று செயற்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

1983-ம்.ஆண்டு முதல் திருமலை மாவட்டத்தில் இலங்கை அரசின் சிங்களக் குடியேற்றத்திட்டத்திற்கு இவரே பொறுப்பாக இருந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசினதும், இராணுவ உயர் மட்டங்களிலும் பெரும் செல்வாக்கைப்பெற்ற லக்ஸ்மன் விஜேரட்ன, திருமலை அரசஅதிபருடன் இணைந்து அண்மையில் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் 300ற்கும் மேற்பட்ட சிங்களவர்களையும் திருமலையில் குடியேற்ற நடவடிக்கை மேற்கொண்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரது கொலையை அடுத்து குடியேற்றத்திற்கு தயாராக திருமலைக்கு அழைத்து வரப்பட்ட சிங்களவர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் குடியேற அச்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது(70,74)

## தென்னிந்திய திருச்சபை மாணவருக்கு நிவாரண உதவி

தென்னிந்திய திருச்சபையால் யாழ்ப்பாணக் கல்லூரியின்கனேடிய புலமைப்பரிசில் பெற்ற சிறுவர்களுக்கு 300 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னதாக மற்றொரு நிவாரணம் வழங்கவும் ஏற்பாடாகியுள்ளது.

தென்னிந்திய திருச்சபையின் முக்கியஸ்தரான திரு. ஜி. ராசநாயகம் இதனை வழங்கினார். (ப-17)

## தாவடியில் கசிப்பு மீட்பு

தாவடி சிவசக்தி நூல் நிலைய ஒழுங்கையில் உள்ள சில வீடுகளில் இருந்து விடுதலைப் புலிகளால் 15 போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. (ப-10)

### திருமலை கண்ணிவெடியில்

## பலியான பிரிகேடியர் லக்ஷ்மன் மேஜர் ஜெனரலாக பதவியுயர்வு!

நேற்று முன்தினம் திருமலை மாவட்டம் பன்மதவாச்சியில் நடைபெற்ற கண்ணி வெடித்தாக்குதலில் பலியான திருமலை இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் லக்ஷ்மன் விஜேரட்னவுக்கு அரசு மரணத்திற்கு பிந்திய பதவி உயர்வு வழங்கியுள்ளது.

இவருக்கு மேஜர் ஜெனரல் என்ற மரணத்திற்கு பிந்திய பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

பிரிகேடியர் லக்ஷ்மன் விஜேரட்னவின் மறைவையொட்டி இராணுவத்தினரால் கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நத்தார் கரோல் நிகழ்ச்சி இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது.

### பாலைவனத்தில்...

சதாம் எல்லார் கண்ணையும் விரலைவிட்டு ஆட்டப் போகிறார் என்பது நிச்சயம். அநேக அரபு நாடுகளை ஏற்கனவே பயமுறுத்திப் பணிய வைத்துவிட்டார். குவெய்த்தின் எண்ணெய் நிலங்களும், போர் டாங்கிகளும், விமானங்களும் அவருடைய வசத்தில் இருப்பதால் அவரை வெல்ல முடியாத நிலையில் இருக்கிறார். மிக பயங்கரமான நவீன ஏவுகணைகள் இருப்பதால் அவற்றை வைத்து சதாம் வளைகுடா நாடுகளில் யாரை வேண்டுமானாலும் அச்சுறுத்தலாம். இந்தச் சிக்கலில் புகுந்து கொள்ள ரஷ்யர்களுக்கு விருப்பமில்லை என்ற அறிவிப்பு, உண்மையில் அமெரிக்கர்களுக்கும், அவர்களுடைய மேற்கத்திய நண்பர்களுக்கும் பாதகமாகப் போய்விட்டது.

வேறு ஒரு வழிதான் இருக்கிறது. கடலிலிருந்தும், வானத்திலிருந்தும், ஈராக்கின் மேல் குண்டு வீசுவது. அது சதாமை கல்ஃபின் மீது ஏவுகணைகளை வீசத் தூண்டும். இப்படிப்பட்ட ஒரு சர்வநாச காட்சியை யாரும் விரும்பவில்லை. இப்போதைக்கு எல்லா துருப்புச் சீட்டும் சதாம் ஹுசைனின் கைகளில் இருக்கின்றன.

(நன்றி: 'இந்தியா ருடே')

| மக்கள் தொகை | வீரர்கள் | டாங்குகள் | பீரங்கிகள் | போர் விமானம் |
|---|---|---|---|---|

## வீரமரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்பு, புல்லுமலை ஆகிய பகுதிகளில் நிகழ்ந்த இருவேறு வெடிவிபத்தில் 2-வது லெப். வோல்டி (கந்தசாமி சிவப்பிரகாசம்,குருக்கள் மடம்), வசந்த் ஆகியோர் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (71)

### தொண்டர்...

நியமனம் வழங்கப்பட வல்ல

## பாடசாலைகளில் மீண்டும் பாடப்பரிசோதனை முறை

களில் யாரை வேண்டுமானாலும் அச்சுறுத்த லாம். இந்தச் சிக்கலில் புகுந்து கொள்ள

(நன்றி: 'இந்தியா ருடே')

| | மக்கள் தொகை | வீரர்கள் | டாங்குகள் | பீரங்கிகள் | போர் விமானம் |
|---|---|---|---|---|---|
| ஈராக்-குவைத் | 18 15மில்லியன் | 1,020,300 | 4,775 | 3,776 | 570 |
| இஸ்ரேல் | 4 5 மில்லியன் | 141,000 | 3,850 | 1,361 | 577 |
| சிரியா | 11 3மில்லியன் | 404,000 | 4,050 | 2.150 | 448 |
| பஹ்ரெயின் | 613,000 | 2,850 | 60 | 15 | 12 |
| ஈரான் | 52 8மில்லியன் | 604,500 | 1,000 | 865 | 50 |
| சவூதிஅரேபியா | 13.1மில்லியன் | 72,300 | 550 | 505 | 182 |
| ஓமான் | 1.4மில்லியன் | 25,500 | 39 | 138 | 51 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | 1.6மில்லியன் | 43,000 | 136 | 232 | 88 |

# 45-ம் நாள் நினைவு அஞ்சலி

## உயர்திரு. வெற்றிவேலு சரவணபவன்

(மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்)

எந்திரவியமே! தந்திர மறியாச் சரவணபவனே!
கந்த வேள் அருள்தரு மாகியம் பதியில்த் தோன்றிய சுடரே!
செந்தமிழ்த் தாய் வன் மண்ணில் வணிக நிறுவனம் கண்டு
நொந்தவர்க் குதவிடும் பொது நலம் பேணினை — அதனால்
பயங்கரவரசு படி நாலு ஏறிப் போக்கினை நின்னுயிர்
சாந்தி பெறுக! பெறுக அமரத்துவ உலகம்.
நின்தன் நினைவுகள் என் மனமுருக்கி வடிக்கும்
கண்ணீர்த் துளிகள் அஞ்சலி பூக்களாகும்.
அன்ப! ''நல்லவர் பிறந்தார் பிறந்தபின் இருக்கார்
என்பதறிவர்'' அதனால் ஆறினம், வாழ்க நின்பெயர்.

வல்வெட்டித்துறை நண்பர்கள்

12127

வீரவணக்கத்தைத் தெரிவித் துக்கொள்கின்றனர். (71)

## தொண்டர்...

நியமனம் வழங்கப்படவுள்ள தெனவும், ஜனவரியில் இப் பரீட்சை இடம் பெறலாமென வும் முரசொலி ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே. (74)

## காங்கேசன்...

வித்தன.

காங்கேசன்துறைக்கு உண வுக்கப்பல்களை வரவழைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், அப்பகுதியை பாதுகாப்பு வலயமாக்க முயற்சி மேற்கொள்ளப்படுவ தாகவும் முரசொலி11.11 90 இல் தலைப்புச்செய்தி வெளி யிட்டிருந்தது.

இதேவேளை காங்கேசன் துறைப்பகுதி பாதுகாப்பு வலயமாக்கப்பட்டால் இங் குள்ள சீமெந்து தொழிற் சாலையும் இயங்க வாய்ப் புண்டு என கொழும்புச்செய் திகள் தெரிவிக்கின்றன.74.66

## வடக்கே...

களை இறக்குதல், லொறி கள் மூலம் கூட்டுறவுச் சங் கங்களுக்கு எடுத்து வருவது குறித்து நேற்று உயர் அதி காரிகள் ஆராய்ந்ததாகச் செயலக வட்டாரங்கள் தெரி வித்தன. (66)

# பாடசாலைகளில் மீண்டும் பாடப்பரிசோதனை முறை

பாடசாலைகளில் பரிசோ தனை முறை மீண்டும் ஜன வரி மாதம் முதல் அமு லாக்கப்படுமென கல்வி உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி அறிவித்துள் ளார்.

முன்பு பாடசாலைகளில் அமுலில் இருந்தபரிசோதனை முறை நீக்கப்பட்டதுடன் பாடசாலைப் பாடப் பரிசோ தனை முறை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

எனினும், வடபகுதியில் வருடத்திற்கு ஒருமுறை குழுப் பரிசோதனைமுறை நடை முறையில் இருப்பதும். சில கோட்டங்களில் கொத்தணி மட்டப்பரிசோதனை, கோட் டமட்டப் பரிசோதனை என் பன மேற்கொள்ளப்படினும் பாடப்பரிசோதனை முறை யில் திருப்திகரமான பெறு பேறுகள் கிடைக்கவில்லை.

இதனால் வருடத்திற்கு குறைந்தது ஒருமுறையாவது ஒவ்வொரு பாடசாலையிலும் பாடரீதியான மதிப்பீடு நடத் தப் படுவது உறுதி செய்யப் படும் விதத்தில் புதியதிட்டம் அமையுமெனத் தெரிவிக்கப் படுகின்றது. (32)

## மட்டக்களப்பில்..

பட்ட ஐவர் விபரம்,-

ப. மாசிலாமணி 21. (கொச் சிக்கொடி), இ. நவரட்ணம் 20 (கொச்சிக்கொடி). ந. திருச்செல்வம் 18 (கொச்சிக் கொடி). மு உதயகுமார் 20 (38ம் கொலனி, சி. அரிய நாயகம் 18 (பட்டிப்பாளை தும். (71)

## தொண்டமானாறில்

யில் ஹெலிக்கொப்டர் சுட்ட தில் இரண்டு பேர் காலில் காயமடைந்தனர். (32-ப-24)

## கட்டுவனில்...

சிப்பாய்கள் கொல்லப்பட்ட தாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மோதலையடுத்து நேற்று விமானங்கள் பலாலிக்கு அதிகமாக வந்து சென்ற மையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (48 71)

இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 20-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.